# ‘கலைஞர்’ எனும் சொல்!



கருப்பு சிவப்புக் கொடியில்
கலந்திருக்கும் உயிர்.
திராவிடத் தோட்டத்தில்
தமிழ் விளைவிக்கும் பயிர்!

‘கலைஞர்’ எனும் சொல்
விரோதிகளை வெல்லும் படையணி;
துரோகங்களின்
துயர் நீக்கும் நிவாரணி!

‘கலைஞர்’ எனும் சொல்
அண்ணா அறிவாலய
அரசியல் ஆய்வகம்;
காலத்தை வெல்லும்
கருத்தியல் கருவூலம்;
நேர்வழியைப் பயிற்றுவிக்கும்
நூற்றாண்டு நூலகம்!

முத்தமிழறிஞரே!
உன் பெயரை உச்சரித்தால்
உற்சாகம் பிறக்கிறது;
உள்ளத்தில், உடல் மொழியில்
ஒரு கம்பீரம் கிடைக்கிறது.

உன்
உதயநாளில்தான்
தமிழ் உலகின்
கீழ்வானம் சிவந்தது;
உன் அரசியலால் தான்
இந்தியா முழுவதும்
திராவிட வெளிச்சம் பாய்ந்தது.
நெருக்கடி நிலையிலும்
சுவாசிக்கும் காற்றோடு
சுயமரியாதைக் காற்றையும்
காப்பாற்றி வைத்திருந்தாய்.

நீண்ட நெடிய எங்கள்
பயணத்திற்கு
வரைபடம் வழங்கியுள்ளாய்.

வரலாற்றில் ஒரு புரூட்டஸ் உன்
வாழ்க்கையில் பலநூறு புரூட்டஸ்கள்!

நெஞ்சில் பொறுக்காத துயரங்களில்
நெஞ்சுக்கு நீதிதான் மருந்து போடுகிறது.

வெற்றியும் தோல்வியும்
ஒற்றைநாள் செய்தி என்றே
கற்றுக் கொடுத்திருக்கிறாய்!

விழுந்த வேகத்தில்
எழுந்து நிற்கும்
வித்தையை
பயிற்றுவித்துள்ளாய்.

நெருப்பில் முளைத்தெழுகின்ற
‘ஃபீனிக்ஸ்’ பயிற்சி
வழங்கியுள்ளாய்.

மாபெரும் தலைவர்,
மனிதநேயர் கழகத்
தாயுமானவர்
தலைவர் தலைமையில்
சின்னவர் வழிநடத்தும்
பாசறை இளைஞர் படை
முன்னணி நடைபோட
தமிழகம் மீட்போம்;
தன்மானம் காப்போம்;
உன் மீது ஆணை!



**அறந்தாங்கி வெங்கடேசன்**
**வழக்கறிஞர்**

# கலைஞர் 95

# வாழிய வாழிய வாழியவே!

## 2018 – கோபாலபுரம் இல்லத்தில் உணர்வின் மடலை வாசித்து காண்பித்து நெகிழ்ந்த தருணம்!



குழந்தையாய்ப் பிறந்து
சிறுவனாய் வளர்ந்து
விபரம் தெரியும் வயதிலேயே
உனக்குத் தமிழும் அறிந்து
தமிழனைக் காக்கும் பணியும் புரிந்து
14 வயதில் பொது வாழ்வின்
பயணத்தைத் தொடங்கிவிட்டாய்
எடுத்த எடுப்பிலேயே இனம்மொழி
காக்கும் அரும் பயணத்தை தொடங்கிவிட முடியுமா?
அதற்காக உன்னை எந்த வயதில் தயார்படுத்தினாய்?
ஐந்து வயதிலும் பத்து வயதிலும்
சிந்திக்க இயலாதே! ஆனால் நீ சிந்தித்தாய்!
அதனால்தான் சொல்கிறோம் **நீ சுயம்பு!**

தாயின் கருவிலே தமிழை
கண்காணித்த காவலன் நீ
இனத்தை உயர்த்த உள்ளிருந்தே
சிந்தித்த பாவலன் நீ
மெய்ஞானமும் விஞ்ஞானமும்
வியந்து பார்க்கிறது உன் அறிவையும் ஆற்றலையும்.
இன்று உனக்கு அகவை 95
நீ பிறந்தநாள் தமிழனின் விழிதிறந்தநாள்
இந்நாள்வரை நீ ஆற்றியுள்ள தமிழ்ப்பணிக்கு
தியாகத்திருப்பணிக்கு ஈடாய் தந்திட
எங்களிடம் எதுவுமில்லை.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா
கண்டெடுத்த நன் முத்து நீ!
அதிலும் கூட ஒரு திருத்தம்
கலைஞர் என்கிற விதையே
நடந்து சென்று விழுந்த மண் ஈரோடு
கலைஞர் என்கிற கருவே
அண்ணா எனும் அழகிய தமிழ் மகனின்
காஞ்சிக் கருவறையில் வளர்ந்தது! மலர்ந்தது!
அஞ்சுகம் ஒரு தாய்
அண்ணா ஒரு தாய்
இரட்டைத் தாய்க்கு ஒரு மகனாய்
பிறந்து வளர்ந்த அதிசயப்பிள்ளை
அதனால்தான் சொல்கிறோம்
**நீ சுயம்பு**

எல்லாத் தலைவர்களும்
மக்களின் நலனுக்காக
தலையில் சுமையைச் சுமந்தார்கள்
நீ மட்டும்தான் தமிழினத்தைக்காக்க
உன் தலையையே சுமையாக
ஆக்கிக்கொண்டாய்
உன் உயிர் உள்ளவரை அந்தச் சுமையை
நீ இறக்கி வைக்கமாட்டாய்.

உன் சுமையை நாங்கள்
வாங்கிக் கொள்ளவும்
தாங்கிக் கொள்ளவும்
இயலாது, முடியாது, நடக்காது.
அதனால்தான் சொல்கிறோம்.
**நீ சுயம்பு**


இன்று நீ ஓய்வை உடலுக்குக் கொடுத்தாலும்
உன் உள்ளம் தமிழனான என்னையும்
இந்த மண்ணையுமே எண்ணிக் கொண்டிருப்பதை
நாங்கள் நன்கறிவோம்.
95 வயதிலும் உன் தலைமையில்தான்
இந்த இயக்கமும் உடன் பிறப்புகளின்
இதயமும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின்
நெடும்பயண வரலாற்றில்
உலக அரசியல் வரலாற்றில்
காணாத அற்புதக்காட்சியை
தளபதியின் பொது வாழ்வுப்பயணத்தில்
காண்கிறோம்.

95 வயதிலும் நீயே எங்கள் தலைவர்
என்று தன் தோள்களில் அமரவைத்து
இன்றும் உன் தலைமையில்தான்
தி.மு.க. பீடுநடை போடுகிறதென்பதை
உன்னால் “உழைப்பு உழைப்பு உழைப்பு”
எனப் போற்றப்பட்ட தளபதி அவர்களின்
பயணம் எங்களுக்குப் பாடம் நடத்துகிறது.
தளபதி தோள்களில் நீ!
இன்றும் உன் தலையே
உயர்ந்து நிற்கிறது.
உன் தலைமையில் செயல்தலைவர் தளபதியின்
கால்கள் நிதானமாக அடி எடுத்து வைக்க எங்கள் பயணம்
தொடர்கிறது.
தலைவா! உன் மகிழ்ச்சி! உன் எழுச்சி!
உன் கண்ணீர்! உன் நம்பிக்கை!
உன் உழைப்பு! உன் தியாகம்!
வெல்லும்! வெல்லும்!
தளபதி வழியில் வெல்வோம்! வெல்வோம்
அதனால்தான் சொல்கிறோம்.
**நீ சுயம்பு**

**வாகை சந்திரசேகர்**
**தலைவர்,**
**கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை**

# சூன் - 3 சமூக நீதி உயர்ந்த நாள்!



சூன் 3
சமூக நீதி பிறந்தநாள்,
தலைவர் கலைஞர் உதித்தநாள்,

உலக அரசியலின் அதிசயம்,
இந்திய அரசியலின் ஆச்சரியம்,
தமிழக அரசியலின் விடியல்,
மக்களின் வாழ்வியலை
அறிந்த
ஆராய்ச்சியாளர்,
சமூகம்,
பொருளாதாரம்,
நிர்வாகம்,
மருத்துவம்,
ஆகியவற்றை
அரசியலில்
சமச்சீராக புகுத்தி,
மக்களின் வாழ்வியலில்
வெற்றிக்கண்ட
தலைச்சிறந்த
மனிதர்,
தலைவர் கலைஞர்,

உலக அரசியலில்,
இந்திய அரசியலில்,
தமிழக அரசியலில்,
ஆளுமையும், நிர்வாகமும்,
இலக்கி அறிவும்,
சமூக சிந்தனையில்
அக்கறையும்
நிறைந்த,
அறிந்த,
ஒரே தலைவர்,
ஒரே முதல்வர்,
முத்தமிழ் அறிஞர்
தலைவர் கலைஞர்,

சிலர் கவிஞர்,
சிலர் நாவலாசிரியர்,
சிலர் நாடக ஆசிரியர்,
சிலர் எழுத்தாளர்,
சிலர் கட்டுரையாளர்,
சிலர் உரைநடை ஆசிரியர்,
சிலர் திறனாய்வாளர்,
சிலர் ஆராய்ச்சியாளர்,
சிலர் பத்திரிக்கையளர்,
சிலர் சிற்றிலக்கியவாதி,
சிலர் புலவர்,
சிலர் வசனகர்த்தா,
சிலர் பாடலாசிரியர்,
சிலர் ஓவியர்,
சிலர் காப்பிய ஆசிரியர்,
சிலர் புராண ஆசிரியர்,
சிலர் சிறுகதை ஆசிரியர்,
சிலர் பேச்சாளர்,
சிலர்கதை ஆசிரியர்,
சிலர் சொல்லாட்சியர்,
சிலர் செயலாட்சியர்,
சிலர் அரசியல்வாதி,
சிலர் நிர்வாகி,
சிலர் மேலவை உறுப்பினர்,
சிலர் சட்டமன்ற உறுப்பினர்,
சிலர் அமைச்சர்,
சிலர் முதலமைச்சர்,
சிலர்கட்சி பொருளாளர்,
சிலர் கட்சித் தலைவர்,
என தனித்தனியாக
பதவி வகுத்தவர்கள்,
பணியும் வகுத்தவர்கள்,
எல்லாமுமாக
வாழ்ந்த தலைவர்,
வாழும் தலைவர்,
வரலாற்று
முதல்வர்
அய்யா கலைஞர்,
சூன் 3
பிறந்தநாள்,
சமூக நீதியாய்
உயர்ந்த நாள்.



**த.சௌந்தரராஜன்**
இணை இயக்குனர் (ஓய்வு)
நகராட்சி நிர்வாகத்துறை.

# என்றென்றும் கலைஞர்!



தோன்றிற் புகழோடு
தோன்றியவர் கலைஞர்தான்
பிறப்பு முதல் இறப்பு வரை
எதிர்ப்புகளை முறியடித்துச்
சிறப்புகளைப் பெற்றிட்ட
செந்தமிழ்த் தலைவன் நீதான்!

போட்டிகளைப் பற்றியெல்லாம்
எள்ளளவும் கவலையின்றி
வேட்டி கட்டிய தமிழனாக
வெற்றிகளைக் குவித்தவர்!

அடக்குமுறைகளை எதிர்த்தே
அரசியல் பயணம்
தொடங்கியதால்
அடக்கம் செய்வதற்குக் கூட
அடக்குமுறைகளை
எதிர்த்து வென்றாய்!

உலகத் தலைவர்களில்
உனக்கிருந்த எதிரிகளைப் போல்
ஒருவருக்கும் இருந்ததில்லை
நீயோ
ஒருபோதும் அஞ்சியதில்லை!

இறந்தவரிடம் பகைமறந்து
நடப்பதைத்தான் இதுவரை
பார்த்துள்ளோம்
இறந்த பின்னும் பகைவரோடு
போராடி வென்றவர்
நீ ஒருவன் தான் தலைவா!

வள்ளற்பெருமான் சொல்லிய
மரணமில்லாப் பெருவாழ்வு
வாழ்பவர் நீங்கள் மட்டும்தான்
மரணத்திற்குப் பின்னும்!

அரசியல் வானில் தோன்றிய
அதிசய விண்மீன்
இலக்கிய உலகில் வந்த
இணையில்லா இமயம்!

தரமாக மற்றவரை
மதித்திட்ட தமிழ்ப்பண்பு
இலக்கியவாதிகளை
நேசித்த தாயன்பு!

தமிழ்ச்சமுதாயம்
சுவாசித்த மூச்சுக் காற்று
தமிழ்மானம் காத்திட்ட
தன்னேறில் கவிதை ஊற்று!

எதிரிகளையே கண்டு கண்டு
களை எடுத்த புதிர்
ஏழையர்க்கு வாழ்வளிக்கத்
தோன்றிய கதிர்!

திருக்குவளை தந்திட்ட
தீப்பிழம்பு
அருட்கொடையாய் தளபதி
மு.க. ஸ்டாலின் எனும்
கருணைக் கொடை வழங்கிய
முத்தமிழ் அறிஞர்
கலைஞரின்
புகழ் போற்றி வணங்குகிறேன்!

**கவிஞர்கோ, மக்கள் கவிஞர்**
**அரு. நாகப்பன்**
காரைக்குடி